குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1, சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | ராமராஜன் த–பெ பழனிசாமி | நாள்:09.09.2022 |
| வயது | | PW 5 |
| தொழில் | | CC:190/2017 |
| காவல் நிலையம் | | Cr.No.20/2015 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 09.09.2022**

**முதல் விசாரணை –** நான் அரசு தேர்வுகள் இயக்ககத்தில் இணை இயக்குநராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது நான் சென்னையில் வசித்து வருகிறேன். அண்ணாமலை பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து 14.03.2014 தேதியிட்ட எங்கள் அலுவலகத்திற்கு வரப்பெற்ற கடிதத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக பதிவாளர் அந்த கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த எதிரி G. திருஞானசம்பந்தம் இடைநிலை கல்வி பள்ளி விடுப்பு சான்றிதழின் உண்மை தன்மையை அறியும் பொருட்டு ஒப்பாய்வு செய்து அறிக்கை வழங்கும்படி கோரியிருந்தார். மேற்படி கடிதத்துடன் G. திருஞானசம்பந்தம் என்பவரின் இடைநிலை கல்வி பள்ளி விடுப்பு சான்றிதழின் நகல் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி சான்றினை எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் Tabulated Mark Register உடன் ஒப்பாய்வு செய்ததில் மேற்படி பதிவாளர் அனுப்பியிருந்த சான்றிதழில் Reg.No/Session/Year/327541/MAR.1984 என்று இருந்தது. மேலும் அந்த சான்றிதழில் மதிப்பெண்கள் தமிழில் 41 மதிப்பெண்கள்; ஆங்கிலத்தில் 37 மதிப்பெண்கள்; கணிதம் 13 மதிப்பெண்கள்; அறிவியல் பாடத்தில் 35 மதிப்பெண்களும்; சமூக அறிவியல் 15 மதிப்பெண்கள் மொத்தம் 141 மதிப்பெண்கள். ஒப்பாய்வுக்காக பதிவாளர் அனுப்பியிருந்த மதிப்பெண் சான்றிதழில் இருந்த பதிவெண்ணான 327541/MAR.1984 எங்கள் அலுவலக பதிவேடுகளுடன் ஒப்பிட்டு பார்த்தில் மேற்படி பதிவெண் 327541/MAR.1984 எஸ் கலைச்செல்வி என்பவருடையதாகும். அவர் பெற்றிருந்த மதிப்பெண்கள் தமிழ் பாடப்பிரிவில் 55 மதிப்பெண்கள்; ஆங்கிலத்தில் 37 மதிப்பெண்கள்; கணிதம் 78 மதிப்பெண்கள்; அறிவியல் பாடத்தில் 44 மதிப்பெண்களும்; சமூக அறிவியல் 47 மதிப்பெண்கள் மொத்தம் 261 மதிப்பெண்கள். எனவே எங்களது அலுவலகத்திற்கு மேற்படி பதிவாளர் ஒப்பாய்வுக்காக அனுப்பியிருந்த G. திருஞானசம்பந்தம் என்பவருடைய சான்றானது போலிச்சான்று என்பது தெரியவந்தது. மேற்படி விபரங்களை அண்ணாமலை பல்கலைக்கழக பதிவாளருக்கு தெரிவித்து ஒப்பாய்வுக்காக அனுப்பப்பட்டிருந்த மதிப்பெண் சான்றானது போலிச்சான்று என்று என்னுடைய ந.க.எண்.021231/வி2(11)/2014 நாள் 09.06.2014 தேதியிட்ட ஒப்பாய்வு அறிக்கையினை அனுப்பி வைத்தேன். (நான் அளித்த 09.06.2014 தேதியிட்ட ஒப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.10 ஆகு குறியீடு செய்யப்பட்டுள்ளது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை–** எதிரி ஆஜர். குறுக்கு விசாரணைக்கு அவகாசம் கோரப்படவில்லை. எனவே உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/- Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram